செயற்பொறியாளர், பொபது., நீஆது., கட்டட தரக்கட்டுப்பாடு கோட்டம்,
திருச்சி அவர்களின் செயல்முறை ஆணை

முன்னிலை: பொறி.P.மாணிக்கம், D.C.R.E
செயற்பொறியாளர் பொபது., நீஆது.,

செயல் முறை கடித.எண்: இ2/ கோ-52/2019 / நாள்: .04.2019

அய்யா,

பொருள்: நியமனம் – நேரடி நியமனம் - தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2015-16, 2016-17 (ம) 2017-18 –ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு தொகுதி IV –ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு – பணிவரன் முறை செய்து ஆணை வழங்குவது – குறித்து.

பார்வை:

1) செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை கடித எண். 1150/PSD (H2) 2019/ நாள்:18.02.2019.

2) முதன்மை தலைமை பொறியாளர் நீஆது மற்றும் தலைமை பொறியாளர் (பொது) பொ.ப.து சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணை எண்.எஸ்3 (3) / 25366/2019 / நாள்: 25.02.2019.

3) தலைமை பொறியாளர் (ம) இயக்குநர், பொபது, நீராய்வு நிறுவனம், நீரியல் (ம) தரக்கட்டுப்பாடு, நீஆது, தரமணி, சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். அ1 / 636 /2019 /நாள்: 08.03.2019.

4) இக்கோட்ட அலுவலக செயல்முறை கடித எண். இ2/ கோ-52/ 2019/ நாள்:13.03.2019

******

பார்வை 1-ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் இளநிலை உதவியாளராக தெரிவு செய்யப்பட்டு, பார்வை-2,3 மற்றும் 4-ல் காணும் செயல்முறை ஆணைகளின் படி மறுபணியமர்வு பெற்று 13.03.2019 முற்பகல் முதல் இக்கோட்டத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கட்டட தரக்கட்டுப்பாடு உபகோட்டம் கோயம்புத்தூரில் பணியாற்றி வரும் செல்வி.R.U.லாவண்யா, இளநிலை உதவியாளர், இளநிலை உதவியாளர் பதவியில் தமிழ்நாடு மாநில சார்நிலை விதி 23(அ) –வின்படி 13.03.2019 முற்பகல் முதல் பணிவரன் முறை செய்து ஆணையிடலாகிறது.

மேற்கண்ட பணிவரன் முறை செய்யப்பட்ட நாள் 13.03.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் இவரது தகுதிகாண் பருவ காலம் தொடங்கி ஆணையிடப்படுகிறது.

இவர் தனது தகுதிகாண் பருவத்தினை மூன்றாண்டு தொடர் பணிக்காலத்திற்குள் இரண்டு ஆண்டு பணிக்காலத்தை முடிக்க வேண்டும் எனவும், தகுதிகாண் பருவ காலத்திற்குள் அரசு பணியாளர் பயிற்சி நிலையம் பவானிசாகர் -ல் நடைபெறும் அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

செயற்பொறியாளர், பொ.ப.து.,நீ.ஆ.து.,(கூ.பொ.)
கட்டட தரக்கட்டுப்பாட்டு கோட்டம்,
திருச்சி-1.